பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
28 06 2025 6 45
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலக காவல்துறை மற்றும் தீயணைப்பு விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் நாடாக இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. 2030ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் தூய்மையான எரிசக்தி உற்பத்தி என்ற இலக்கை இந்தியா நிச்சயம் எட்டும் என்று புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

3. பள்ளிக் கல்வித்துறையில் புதிதாக 2 ஆயிரத்து 436 ஆசிரியர்கள் அடுத்த மாதம் நியமிக்கப்பட உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

4. பருத்தி விவசாயிகளுக்கு உரிய விலை கிடைத்திட அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

5. இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 19 வயதுக்குட்பட்டோருக்கான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

உலக காவல்துறை மற்றும் தீயணைப்பு விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் நாடாக இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது, நாட்டின் விளையாட்டு உள்கட்டமைப்புக்கான அங்கீகாரம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

2029ஆம் ஆண்டு இந்த விளையாட்டுப் போட்டி இந்தியாவில் நடைபெற உள்ளதாக சமூக வலைதளத்தில் அவர் கூறியுள்ளார்.

இது இந்தியர்கள் அனைவருக்கும் மிகுந்த பெருமை சேர்க்கும் தருணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வை நடத்தும் மதிப்பு மிக்க முயற்சியில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது என்றும், நாட்டில் உள்ள பரந்த விளையாட்டு உள்கட்டமைப்புக்கான உலகளாவிய அங்கீகாரம் இது என்றும் அவர் கூறியுள்ளார்.

50க்கும் மேற்பட்ட விளையாட்டுக்களுடன் உள்ளடக்கிய காவல் மற்றும் தீயணைப்புத்துறைக்கான உலகப் போட்டியை நடத்துவதற்கான இடமாக அகமதாபாத் தேர்வு செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

2030ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் தூய்மையான எரிசக்தி உற்பத்தி என்ற இலக்கை இந்தியா நிச்சயம் எட்டும் என்று புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

பெங்களூருவில் மின்கலன் எரிசக்தி சேமிப்பு உற்பத்தி ஆலையை நேற்று திறந்து வைத்துப் பேசிய அவர், உலகளாவிய எரிசக்தி சேமிப்பு சந்தையில் இந்தியா முன்னணியில் உள்ளதாக கூறினார்.

தூய்மையான எரிசக்திக்கான வாக்குறுதியை இந்தியா படிப்படியாக நிறைவேற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் உற்பத்தியாகும் மின்சாரத்தை பயன்படுத்தும் வகையில் மின்கட்டமைப்புகள் பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

2032ஆம் ஆண்டுக்குள் நாட்டின் எரிசக்தித் துறை 4 லட்சத்து 79 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

பள்ளிக் கல்வித்துறையில் புதிதாக 2 ஆயிரத்து 436 ஆசிரியர்கள் அடுத்த மாதம் நியமிக்கப்பட உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

தருமபுரி மாவட்டம் அதியமான்கோட்டையில் நேற்று பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான மாநில அளவிலான கருத்தரங்கில் பேசிய அவர், ஆசிரியர் காலிப்பணியிடங்கள் படிப்படியாக நிரப்பப்பட்டு வருவதாக கூறினார்.

பள்ளிக்கு வரும் மாணவ – மாணவியருக்கு ஆசிரியர்கள் பாடம் நடத்த வேண்டும் என்றும், வேறு பணிகளுக்கு அவர்களை பயன்படுத்தக் கூடாது என்றும் அவர் அறிவுறுத்தினார்.

கல்வியாண்டின் தொடக்கத்தில் மாணவ – மாணவியருக்கு பள்ளி வளாகத்தில் உள்ளூர் காவல்துறையினரும், ஆசிரியர்களும் ஒழுக்கம் சார்ந்த அறிவுரைகளை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் வனப் பகுதிகளில் வனவிலங்குகளுக்கும் - மனிதர்களுக்கும் இடையிலான மோதலை தடுக்கும் வகையில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக வனத்துறை அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், வனத்துறையில் காலியாக இருந்த ஆயிரத்து 633 வன காவலர்கள் மற்றும் வன காப்பாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

வனவிலங்குகள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களைக் கண்டறிந்து வன காவலர்கள் மற்றும் வனக் காப்பாளர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு மனித மற்றும் வன உயிரின மோதலைத் தடுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மக்கள் வசிக்கும் பகுதியில் வனவிலங்குகள் நுழைவதைத் தடுப்பதற்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

திருவாரூர் மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் 538 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் இதுவரை 5 லட்சத்து 21 ஆயிரத்து 603 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு. மோகன சந்திரன் கூறியுள்ளார்.

திருவாரூரில் நேற்று நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பேசிய அவர், இதன் மூலம் ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 241 விவசாயிகள் பயனடைந்துள்ளதாகக் கூறினார்.

கோடை குறுவை பருவத்தில் 157 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இதுவரை 55 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

திருவாரூர் மாவட்டத்தில் நடப்பாண்டு 2 ஆயிரத்து 748 விவசாயிகளுக்கு 192 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஆட்சியர் கூறினார்.

<<<<>>>>

பருத்தி விவசாயிகளுக்கு உரிய விலை கிடைத்திட அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

இது தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், விவசாயிகள் பருத்தியை தரம் பிரித்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு கொண்டுவந்து விற்பனை செய்து பயனடையுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

மாநிலத்தில் பருத்தியின் தரத்திற்கேற்ப குவிண்டால் ஒன்றுக்கு அதிகபட்ச விலையாக 7 ஆயிரத்து 700 ரூபாயும், குறைந்தபட்ச விலையாக 4 ஆயிரத்து 111 ரூபாயாவும் சராசரி விலையாக 5 ஆயிரத்து 850 ரூபாயிலும் கொள்முதல் செய்யப்பட உள்ளதாக அரசு கூறியுள்ளது.

இதுவரை மாநிலம் முழுவதும் ஆயிரத்து 976 மெட்ரிக் டன் பருத்தி கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாகவும், பருத்தியின் தரத்திற்கேற்ப விலை நிர்ணயம் செய்யப்படுவதால் விவசாயிகள், பருத்தியை உலர்த்தி தரம் பிரித்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு கொண்டுவருமாறும் அந்த அறிக்கையில் அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகததின் ஒருசில இடங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோயம்புத்தூர் மாவட்ட மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

சில இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஒரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

சர்வதேச சட்ட நெறிமுறைகளுக்கு உட்பட்டு ஈரான் நடந்துகொள்ள வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

----------

யுக்ரைனை ரஷ்யா ஆக்கிரமிப்பதாக நேட்டோ நாடுகளின் குற்றச்சாட்டை ரஷ்ய அதிபர் திரு. விளாமிர் புடின் நிராகரித்துள்ளார்.

----------

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் சிறப்பாக செயல்பட்ட குஜராத் மாநிலம் ரன் மற்றும் கட்ச் பகுதியைச் சேர்ந்த எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்களை அம்மாநில முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல் சந்தித்துப் பாராட்டினார்.

----------

தில்லியில் தற்போதுள்ள மதுபானக் கொள்கையை ஓராண்டுக்கு நீட்டித்து அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

----------

திரைத்துறையில் உச்சபட்ச விருதாக கருதப்படும் ஆஸ்கர் விருதுக்கான குழுவில் நடிகர் கமல்ஹாசன் இணைய உள்ளது குறித்து முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

----------

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அருகே 2 கார்களில் கடத்தி வரப்பட்ட சுமார் 20 லட்சம் ரூபாய் மதிப்பிலான 573 கிலோ செம்மரக்கட்டைகளை வனத்துறையினர் பறிமுதல் செய்தனர்.

----------

ராமநாதபுரம் மாவட்டத்தில் மத்திய அரசின் நிதியுதவி திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகத்தின் தற்போதைய நிலை குறித்து பிரதமர் அலுவலக அதிகாரிகள் நேற்று ஆய்வு செய்தனர்.

----------

கொடைக்கானல் பேரிஜம் ஏரிப் பகுதியில் காட்டு யானைகள் முகாமிட்டிருப்பதால் சுற்றுலாப் பயணிகள் அப்பகுதிக்கு செல்ல தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக வனத்துறை அறிவித்துள்ளது.

----------

சென்னையில் தியாகராயநகர் மற்றும் ராயபுரம் மண்டலங்களில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை அமைச்சர் திரு. சேகர் பாபு நேற்று அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

----------

சென்னையில் ரிசர்வ் வங்கி சுரங்கப் பாதை பாலம் சீரமைக்கும் பணி நடைபெற உள்ளதால் நாளை முதல் சுரங்கப் பாதை ஒருவழிப் பாதையாக மாற்றப்படும் என்று சென்னை மாநகர போக்குவரத்து காவல்துறை அறிவித்துள்ளது.

----------

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 19 வயதுக்குட்பட்டோருக்கான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

Hove நகரில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய இங்கிலாந்து அணி 42 புள்ளி 2 ஓவரில் 174 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

175 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடி இந்தியா, 24 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 178 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

வைபவ் சூரியவன்ஷி 48 ரன்னும், **Abhigyan Kundu** 45 ரன்னும் எடுத்தனர்.

--------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று திண்டுக்கல்லில் நடைபெற ஆட்டத்தில் சேப்பாக் அணி – மதுரை அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி இன்று மாலை மணி 3.15க்கு தொடங்க உள்ளது.

இரவு மணி 7.15க்கு நடைபெற உள்ள மற்றொரு போட்டியில் கோவை அணி – சேலம் அணியை எதிர்கொள்கிறது.

---------------

ஆசிய ஸ்நூக்கர் குழு சாம்பியன் போட்டியின் அரையிறுதிக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற போட்டியில் இந்தியா 3-0 என்ற கணக்கில் கத்தார் அணியை வென்றது.

பலமுறை உலக சாம்பியன் பட்டத்தை வென்ற இந்தியாவின் பங்கஜ் அத்வானி ஆடவர் ஒற்றையர் ஆட்டத்தில் முன்னாள் உலக சாம்பியனான, கத்தாரின் **Ali Al Obaidli**-யை 62-24 என்ற புள்ளிக் கணக்கில் வீழ்த்தினார்.

மற்றொரு இந்திய முன்னணி வீரரான ஆதித்யா மேத்தா, 115-5 என்ற புள்ளிக் கணக்கில் பஷர் அப்துல் மஜீதை தோற்கடித்தார்.

இரட்டையர் பிரிவில் அத்வானி – பிரிஜேஷ் தமானி இணை, **Ali Al Obaidli** – மஜீத் இணையை 22-5 என்ற புள்ளிக் கணக்கில் வென்றது.

<<<<>>>>